# க.பொ.த (உ/த)ப் பரீட்சை - 2013
## வணிகக் கல்வி I
நேரம் : 2 மணித்தியாலம்

01. மனிதத் தேவைகளையும் விருப்பங்களையும் தனித்தனியே அடையாளப்படுத்த முடியும். விருப்பங்களை மட்டும் உள்ளடக்கிய தொகுதி எது?
   1. சோறு, சேலை, மாடிவீடு, அன்பு
   2. உணவு, நீர், சோறு, மின்சாரம்
   3. கல்வி, உணவு, காற்சட்டை, காப்புறுதி
   4. உணவு, உறையுள், உடை, பாதுகாப்பு
   5. போக்குவரத்து, கல்வி, பொழுதுபோக்கு, மின்சாரம்

02. பின்வருவனவற்றுள் 2010ஆம் ஆண்டின் மத்திய வங்கியின் அறிக்கையின் பிரகாரம் கூடுதலான ஏற்றுமதி வருமானத்தை ஈட்டித் தந்தது
   1. தேயிலை
   2. தென்னை
   3. இறப்பர்
   4. புடவைகளும் ஆடைகளும்
   5. இரத்தினக்கற்கள்

03. பின்வருவனவற்றில் அகச்சூழல் காரணிகளைக் கொண்ட சரியான தொகுதியாக அமைவது
   1. உரிமையாளர் / முகாமையாளர் / அமைப்புக் கலாசாரம் / ஊழியர்
   2. உரிமையாளர் / முதலீட்டாளர்கள் / வாடிக்கையாளர் / ஊழியர்
   3. வாடிக்கையாளர் / வழங்குனர்கள் / பிரதியீட்டுப் பொருள் உற்பத்தியாளர்
   4. போட்டியாளர் / முகாமையாளர் / வழங்குனர் / கலாசாரம்
   5. எதிர்பார்க்கும் புதிய வணிகர் / போட்டியாளர் / ஊழியர் / கலாசாரம்

04. பின்வருவனவற்றுள் நுகர்வோர் பொறுப்புக்களை உள்ளடக்கியது
   A - சூழல் பற்றிய அறிவு
   B - சமூகம் தொடர்பாகக் கவனம் செலுத்துதல்
   C - செயற்பாடு ரீதியாகப் பங்களித்தல்
   D - நுகர்வோர் கல்வியைப் பெறுவதற்கான உரிமை
   E - சுகாதாரமான சூழலில் வாழ்வதற்கான உரிமை

   1. A, B, E 2. A, B, C 3. A, D, E 4. A, B, D 5. A, C, E

05. உணவுப் பொருட்களில் அடங்கியுள்ள இரசாயனங்களின் அளவுகள் உறுதி செய்யப்படுதலை கட்டாயப்படுத்தியுள்ள சர்வதேச தரம்

   1. ISO 27000 2. HACCP 3. ISO9000 4. ISO14001 5. ISO 9001 – 2000

06. ரூ. 1000 க்கு மேலான மூலதனம் உடைய பங்குடமையின் ஒப்பந்தம் எழுத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிடுவது
   1. 1918ஆம் ஆண்டு வியாபார பெயர்க் கட்டளைச் சட்டம்
   2. 2007ஆம் ஆண்டு கம்பனிச் சட்டம்
   3. 1890ஆம் ஆண்டு பங்குடமை கட்டளைச் சட்டம்
   4. 1840ஆம் ஆண்டு மோசடி தடுப்புச் சட்டம்
   5. 1907ஆம் ஆண்டு வரையறுத்த பங்குடமைச்சட்டம்

07. பல்தேசியக் கம்பனி ஒன்றின் அனுகூலங்கள் அல்லாதது
   1. வேலையின்மையைக் குறைத்தல்
   2. உழைக்கும் இலாபத்தைத் தாய்நாட்டிற்கு எடுத்துச் செல்லுதல்
   3. புதிய தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்தல்.
   4. நவீன திறன்களைப் பெறுவதற்கான பயிற்சியைப் பெறல்
   5. துணைநிலைச் சேவைகள் விருத்தியடைதல்

08. பின்வருவனவற்றில் பணத்தின் தொழிற்பாடுகளைக் கொண்ட தொகுதி
   1. பொது அங்கீகாரம் / சிறிய அலகுகளாக பிரிபடக்கூடிய தன்மை / நீடித்த வாழ்வு / பரிமாற்று ஊடகம்
   2. இலகுவாக இனங்காணக்கூடிய தன்மை / பெறுமானத்திரட்டு / பெறுமானத்தை அளவிடும் கருவி / பொது அங்கீகாரம்

3. பரிமாற்று ஊடகம் / பெறுமானத்தை அளவிடும் கருவி / பெறுமானத்திரட்டு / பிற்போட்ட கொடுப்பனவு ஊடகம்
4. பரிமாற்று ஊடகம் / பொது அங்கீகாரம் / இலகுவாக இனங்காணல் / பெறுமானத்திரட்டு
5. பரிமாற்று ஊடகம் / பிற்போடப்பட்ட கொடுப்பனவு / பெறுமானத் திரட்டு / கொண்டு செல்லல் இலகு

09. பின்வருவனவற்றில் கைமாற்றத்தக்க ஆவணங்களை கொண்டவை எவை?

A - காசோலை
B - வாக்குறுதிச்சீட்டு
C - காசுக்கட்டளை
D - நிலையான வைப்புச் சான்று
E - பங்குச்சான்று
F - மாற்றுண்டியல்

1. ACB 2. ABF 3. CDE 4. ABE 5. CDF

10. மத்தியவங்கியின் பிரதான கருமம் அல்லாதது
1. நிதிக்கொள்கையை அமுலாக்குதல்.
2. நாணய மாற்றுவீதக் கொள்கையை அமுலாக்குதல்
3. நாணயத்தை வெளியிடுதலும் பங்கிடுதலும்
4. இலங்கையின் சட்டபூர்வமான வெளிநாட்டு ஒதுக்கை முகாமை செய்தல்.
5. அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடு

11. பின்வருவனவற்றில் காப்புறுதியோடு தொடர்புடையனவாகும்.

A - காப்புறுதி முகவர்களைப் பதிவு செய்தல்
B - ஏற்றுமதியை அபிவிருத்தி செய்வதற்காக சந்தைப்படுத்தல், ஆராய்ச்சி மாநாடுகளை ஒழுங்கமைத்தல்
C - காப்புறுதிக் கம்பனிகளை பதிவு செய்தல்
D - ஏற்றுமதியாளர்களுக்கு வங்கிகளும் ஏனைய நிதி நிறுவனங்களும் வழங்கும் கடன்களுக்கு மீள் நிதியீட்டம் செய்தல்.

மேற்குறிப்பிட்ட தொழிற்பாடுகளுள் இலங்கை ஏற்றுமதி கடன்காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாடாக அமைவது

1. Aயும் Cயும்
2. Bயும் Dயும்
3. Aயும் Bயும்
4. Cயும் Dயும்
5. Aயும் Dயும்

12. போக்குவரத்துச் சாதனம் மூலமாக ஒரு தடவையில் கொண்டு செல்லக்கூடிய பொருட்கள் சேவைகளின் அளவு குறிப்பது,
1. தரம்
2. தாராளத் தன்மை
3. இயலளவு
4. கிரயம்
5. விரைவு

13. வணிக நிறுவனம் பயன்படுத்தும் வெவ்வேறு தொடர்பாடல் சாதனங்கள் வருமாறு

A - கடிதம்
B - தொலைபேசி
C - நேர்முக உரையாடல்
D - சுற்றறிக்கை
E - கூட்டம்
F - போஸ்டர்

இவற்றுள் வாய்மொழித் தொடர்பாடல் சாதனங்களை உள்ளடக்கியது

1. ABC 2. ADF 3. BEC 4. BCD 5. DEF

14. பின்வருவன சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தும் ஆவணங்களும் அவற்றை வழங்கும் நிறுவனங்களையும் கொண்டுள்ளது. இவற்றின் சரியான தொகுதி

| | ஆவணங்கள் | | வழங்கும் நிறுவனங்கள் |
|---|---|---|---|
| A | வார்நாமம் | 1 | விவசாயத் திணைக்களம் |
| B | தோற்றுவாய் சான்றிதழ் | 2 | கப்பல் கம்பனி |
| C | சௌக்கியச் சான்று | 3 | வணிக மன்றம் |
| D | நாணயக் கடிதம் | 4 | வணிக வங்கி |

1. A – 1, B – 2, C – 3, D - 4
2. A – 2, B – 3, C – 1, D - 4
3. A – 2, B – 3, C – 4, D - 1
4. A – 3, B – 4, C – 2, D - 1
5. A – 2, B – 4, C – 3, D - 1

15. G8 (குழு – 8) நாடுகளைக் கொண்ட தொகுதி
1. கனடா / பிரான்ஸ் / கொரியா / ஜப்பான்
2. கனடா / இந்தியா / ஜப்பான் / அமெரிக்கா
3. கனடா / பிரான்ஸ் / இத்தாலி / ஜப்பான்
4. பிரான்ஸ் / கொரியா / இத்தாலி / அமெரிக்கா
5. பிரான்ஸ் / இந்தியா / அமெரிக்கா / சுவிஸ்

16. பின்வருவன ஒரு அமைப்பு தொடர்பாக அக்கறை கொள்ளும் தரப்பினர்களின் நோக்கங்களாகக் காணப்படுகின்றன.
1. உயர்ந்த இலாபமும் திரவத்தன்மையும்
2. தரமான பொருட்களும் சேவைகளும் பெறல்
3. உயர்ந்த சம்பளமும் கூலியும் பெறல்
4. சட்டதிட்டங்கள் அறநெறிகளுக்கு அமைவாகச் செயற்படல்
5. பதவியுயர்வும் தொழில் விருத்தியும்

இவற்றில் ஊழியரின் நோக்கங்களாக அமைவன

1. 2, 3 2. 3, 4 3. 3, 5 4. 4, 5 5. 2, 5

17. குறித்த கருமம் குறைவான வளங்களுடன் விரயங்களின்றி குறித்த காலத்திற்குள் செய்து முடிக்கப்படுதல்
1. முகாமைத்துவம்
2. திட்டமிடல்
3. வினைத்திறன்
4. விளைதிறன்
5. ஒழுங்கமைத்தல்

18. பின்வரும் அட்டவணைகளில் முகாமையாளர்களும் அவர்களது பணிகளும் தரப்படுகின்றன

| A | B |
|---|---|
| 1. உயர்மட்ட முகாமையாளர் | A. ஊழியர்களின் கருமங்களை மேற்பார்வை செய்தல். |
| 2. நடுத்தர மட்ட முகாமையாளர் | B. கொள்கைகளை வகுத்தல் |
| 3. முதல் வரிசை முகாமையாளர் | C. கொள்கைகளைச் செயற்படுத்தல். |

இவற்றில் முகாமையாளர்களால் மேற்கொள்ளப்படும் பணிகளைச் சரியாகக் காட்டும் தொகுதி
1. 1 A 2 B 3 C
2. 1 B 2 C 3 A
3. 1 A 2 C 3 B
4. 1 C 2 A 3 B
5. 1 C 2 B 3 A

19. ஹென்றிமின்றஸ்பேக் என்பவரது கருத்துப்படி முகாமையாளரது தீர்மான வகிபாகம் என்பது
1. தகவல்களை வழங்குபவர்
2. தலைவர்
3. கண்காணிப்பாளர்
4. முயற்சியாளர்
5. மேலதிகாரி

20. பின்வருவன திட்டமிடல் கருமத்துடன் தொடர்புடைய படிமுறைகளாகும்.
A - உபாய வழிமுறைகளை இனம் காணல்
B - சூழல் பகுப்பாய்வு
C - திட்டத்தை நடைமுறைப்படுத்தல்
D - நோக்கு இலக்கு என்பவற்றை உருவாக்கல்
E - திட்ட வெற்றியினை மதிப்பிடல்

மேற்கூறப்பட்ட செயற்கூறுகளின் சரியான விடையாக அமையும் தொகுதி எது?
1. B D A C E
2. A B C D E
3. D A B D E
4. B A D E C
5. C A D B E

21. பின்வருவனவற்றுள் ஒழுங்கமைத்தல் செயற்பாடுகளுடன் தொடர்புபடாத விடயம் எது?
1. பணிகளை இனங்காணல்
2. வேலைப்பகிர்வு
3. அதிகார ஒப்படைப்பு
4. திணைக்களப்படுத்தல்
5. சாதனை மதிப்பீடு

22. பின்வரும் தகவல்கள் கட்டுப்பாட்டுத் துணை தொடர்பான தகவல்களாகும்.

A - விரைவாகத் தீர்மானம் மேற்கொள்ள முடியும்.

B - கிட்டிய மேற்பார்வை மேற்கொள்ள முடியும்

C - மேற்பார்வைக்கான கிரயம் குறைவு

D - ஊழியர் சுதந்திரமாகச் செயற்படுவர்

E - ஊழியர் மீது நெருங்கிய கடுமையான மேற்பார்வை மேற்கொள்ள முடியும்.

இதில் ஒடுங்கிய கட்டுப்பாட்டுத் துணையின் அனுகூலங்களாகக் கொள்ளக்கூடியவை

1. A, B, C  2. A, C, D  3. B, C, D  4. C, D, E  5. A, B, E

23. பின்வரும் அட்டவணை கட்டுப்பாட்டு நுட்பங்களையும் அவற்றின் உதாரணங்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

| | கட்டுப்பாட்டு நுட்பங்கள் | | உதாரணங்கள் |
|---|---|---|---|
| A | முன்னூட்டப்பட்ட கட்டுப்பாடு | 1 | இறுதி உற்பத்தியினை பரிசீலித்தல் |
| B | பின்னூட்டப்பட்ட கட்டுப்பாடு | 2 | இயந்திரங்களைப் பராமரித்தல் |
| C | நடைமுறைக் கட்டுப்பாடு | 3 | கட்டிட ஒழுங்குமுறை பரிசீலனை |
| D | அமைப்பு முறைக் கட்டுப்பாடு | 4 | சூழலுக்கு முகம் கொடுத்தல் |
| E | உபாய முறைக் கட்டுப்பாடு | 5 | தரக்கட்டுப்பாட்டுப் பரிசோதனை |

ஒவ்வொரு கட்டுப்பாட்டு நுட்பங்களுக்கும் பொருத்தமான உதாரணங்களைத் தருகின்ற மிகப் பொருத்தமான தொகுதியைத் தெரிவு செய்க.

1. A – 5, B – 4, C – 1, D – 2 E – 3
2. A – 4, B – 5, C – 3, D – 1 E – 2
3. A – 3, B – 2, C – 4, D – 5 E – 1
4. A – 2, B – 1, C – 5, D – 3 E – 4
5. A – 1, B – 3, C – 2, D – 4 E – 5

The National e-learning Portal for The General Education

24. பின்வருவனவற்றுள் ஊழியர் தொடர்பான சட்டமாகக் கொள்ள முடியாதது.

1. கைத்தொழில் பிணக்குச் சட்டம்
2. கடை காரியாலய ஊழியர் சட்டம்
3. கூலி நிர்ணய சபைச் சட்டம்
4. பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்
5. தொழிற்சங்க சட்டம்

25. பின்வரும் விடயங்கள் ஆட்சேர்ப்பு கருமங்களாகும்

1. தொழில் தொடர்பான காரணிகளை இனம் காணல்
2. தொழில் வெற்றிடங்களை இனம் காணல்
3. அக, புற மூலகங்களைத் தெரிவு செய்தல்
4. தொழில் விண்ணப்பப் படிவம் தயாரித்தல்
5. சேர்த்துக் கொள்வதற்கான முயற்சியை மதிப்பிடல்

ஆட்சேர்ப்புக் கருமங்களின் சரியான ஒழுங்கைக் காட்டும் தொகுதி

1. 1, 2, 4, 3, 5
2. 1, 2, 3, 5, 4
3. 2, 1, 3, 4, 5
4. 3, 4, 2, 5, 1
5. 2, 1, 4, 3, 5

26. பின்வருவனவற்றுள் பணச் சந்தையின் துணைச் சந்தையாகக் கொள்ள முடியாதது

1. திறைசேரி உண்டியல் சந்தை
2. திறைசேரி முறிச் சந்தை
3. அழைப்புக்கடன் சந்தை
4. வணிகப் பத்திரச் சந்தை
5. கரைகடந்த வங்கிச் சந்தை

27. பின்வருவனவற்றுள் நீண்டநிதிமூலமாகவும் நேர் நிதிமூலமாகவும் கொள்ளக்கூடியது

1. பங்கு வழங்கல்
2. வங்கிக்கடன்
3. குத்தகை
4. வணிகப்பத்திரம்
5. வங்கி மேலதிகப்பற்று

28.

| | தகவல் முறைமை | | கருமங்கள் |
|---|---|---|---|
| 1 | கொடுக்கல் வாங்கல் தகவல் முறைமை | A | இலத்திரனியல் முறையில் பதிவு செய்தல் |
| 2 | அலுவலகத் தன்னியக்க முறைமை | B | பொருளாதாரச் சிக்கனத் தொகை கணித்தல் |
| 3 | தீர்மானத் தகவல் முறைமை | C | புதிய வியாபாரத் தந்திரோபாயம் ஒன்றைத் தயாரித்தல் |
| 4 | நிறைவேற்றுத் தகவல் முறைமை | D | சம்பளப் பட்டியல் தயாரித்தல் |

மேற்கூறிய அட்டவணையிலிருந்த ஒவ்வொரு கருமங்களையும் நிறைவேற்றுவதற்குப் பொருத்த மான தகவல் முறைமையைக் காட்டும் சரியான தொகுதியைத் தெரிவு செய்க.

1. 1 – A 2 – B 3 – C 4 - D
2. 1 – D 2 – A 3 – B 4 - C
3. 1 – B 2 – C 3 – A 4 - D
4. 1 – C 2 – A 3 – D 4 - B
5. 1 – D 2 – A 3 – B 4 - D

29. சில அடிப்படையின் கீழ் தகவல்கள் வகைப்படுத்தப்படும். நுகர்வோர் திருப்தி, ஊழியர் திறன், நிறுவன மதிப்பு போன்ற தகவல்கள் உள்ளடக்கப்படுவது எவ்வகைப்படுத்தலைச் சார்ந்தது
   1. மூலத்தினடிப்படையில்
   2. தன்மை அடிப்படையில்
   3. நிகழ்வுகளின் அடிப்படையில்
   4. முகாமைத்துவ அடிப்படையில்
   5. காலத்தினடிப்படையில்


30. வணிகத்திட்டம் ஒன்றில் உள்ளடக்கப்படாத விடயமாகக் கருதப்படுவது
   1. நிறுவனம் பற்றிய விபரம்
   2. சந்தைப்படுத்தல் திட்டம்
   3. செலாவணித் திட்டம்
   4. செயற்பாட்டுத் திட்டம்
   5. நிதித்திட்டம்

**31 - 50 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களுடன் வெற்றிடங்களை நிரப்பி விடை எழுதுக.**

31. மனிதனால் கட்டாயமாக நிறைவேற்றிக்கொள்ளப்பட வேண்டிய உடல், உள ரீதியான நிலைமை ……………………………….. எனப்படும்.


32. பாவனை அடிப்படையில் பொருட்களை ……………………………. , ……………………… எனப் பாகுபடுத்தலாம்.

33. வணிகச் சூழலுடன் தொடர்புபட்ட வகையில் சரியான சொற்களைப் பயன்படுத்தி பின்வரும் வரைபடத்தில் வெற்றுப் பெட்டிகளை நிரப்புக.





34. இலங்கையில் உள்ள வணிகங்களில் அரசின் செல்வாக்கு இடம்பெறுகின்ற முறைகள் …………………………….. , ………………………………. , ……………………………….

35. வரியுடன் தொடர்புபட்ட முறையில் பின்வரும் வெற்றுப் பெட்டிகளை நிரப்புக.




36. முகாமைத்துவ செயற்பாட்டுடன் தொடர்புபட்ட வகையில் சரியான சொற்களைப் பயன்படுத்திப் பின்வரும் வரைபடத்தில் வெற்றுப் பெட்டிகளை நிரப்புக.




37. நெறிப்படுத்தல் செயன்முறை பிரதானமாக உள்ளடக்கியுள்ள கருமங்கள் ……………………. , …………………………………. , ……………………………….

38. சமப்பாட்டுப் புள்ளியினை காட்டும் பின்வரும் வரைபடத்தின் வெற்றிடங்களை நிரப்புக.




39. அலகுப் பொறுப்பு அமைப்பு பின்வரும் மூன்று தரப்பினரையும் உள்ளடக்கும் …………………………… , ………………………………. , …………………………….

40. பயன்படுத்தப்படும் அளவிற்கேற்ப தகவல் முறையை ………………. , ……………................, ………………………….. , ……………………… என வகைப்படுத்தலாம்.

**41 - 50 வரையுள்ள வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடைகளைத் தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் எழுதுக.**

41. கம்பனி ஒன்றை கூட்டிணைக்கும்போது கம்பனிப் பதிவாளருக்கு முன்வைக்க வேண்டிய ஆவணங்கள் யாவை?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

42. வெளிநாட்டு வியாபாரம் தொடர்பாக நவீன அபிவிருத்திப் போக்குகள் மூன்று தருக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

43. நடைமுறையில் காணப்படும் சில்லறை வியாபாரிகளின் நவீன போக்குகள் யாவை?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

44. வெளிநாட்டு வியாபாரத்தில் பணக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு பயன்படுத்துகின்ற முறைகள் நான்கினைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

45. நிதிசார் ஊக்குவித்தல் முறைகள் யாவை?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

46. தரக்கட்டுப்பாட்டிற்கு பயன்படுத்தக்கூடிய நுட்ப முறைகள் நான்கினை தருக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

47. விளைதிறனான சந்தை துண்டமாக்கலுக்கு காணப்படவேண்டிய தேவைகள் நான்கினைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

48. கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் பரிமாற்றப்படும் பிணைப்பத்திரங்கள் யாவை?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

49. செயல்திறன் மதிப்பீட்டின் மூலம் தொழில்கொள்வோனுக்கு கிடைக்கப்பெறும் நன்மைகளைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

50. காசு உட்பாய்ச்சலுக்கு உதாரணங்கள் தருக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………


……………………………………………………………………………………………

The National e-learning Portal for General Education


**வணிகக் கல்வி** **வினாத்தாள் I** **விடைகள்**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | - | 1 | 11 | - | 2 | 21 | - | 5 |
| 2 | - | 1 | 12 | - | 3 | 22 | - | 5 |
| 3 | - | 1 | 13 | - | 3 | 23 | - | 4 |
| 4 | - | 2 | 14 | - | 2 | 24 | - | 4 |
| 5 | - | 2 | 15 | - | 3 | 25 | - | 5 |
| 6 | - | 4 | 16 | - | 3 | 26 | - | 2 |
| 7 | - | 2 | 17 | - | 3 | 27 | - | 1 |
| 8 | - | 3 | 18 | - | 2 | 28 | - | 2 |
| 9 | - | 2 | 19 | - | 4 | 29 | - | 2 |
| 10 | - | 5 | 20 | - | 1 | 30 | - | 3 |


31. மனித தேவைகள்
32. நுகர்வோர் பொருட்கள், கைத்தொழில் பண்டங்கள் / வணிகப் பண்டங்கள்
33.





34. மத்திய அரசின் கொள்கைகள், சட்டதிட்டங்களும் நியதிகளும், மாகாண அரசின் கொள்கைகள், சட்டதிட்டங்களும் நியதிகளும், உள்ளூராட்சி சபைகளின் கொள்கைள் சட்டதிட்டங்களும் நியதிகளும்
35.




36.




37. தலைமைத்துவம், ஊக்குவித்தல், தொடர்பாடல்
38.



உற்பத்தி அலகுகளின்
எண்ணிக்கை

39. பொறுப்பாளர், நிதி முகாமையாளர், அலகுகளின் உரிமையாளர்

40. தந்திரோபாய மட்டம், முகாமைத்துவ மட்டம், அறிவுமட்டம், செயற்படுத்தல் மட்டம்

41. கம்பனியின் பெயர் தொடர்பான கூற்று, கம்பனியின் அமைப்பு அகவிதி, கம்பனியின் இயக்குனராக செயலாற்றுவதற்கு ஒவ்வொரு ஆரம்ப இயக்குனர்களின் சம்மதத்தைத் தெரிவிக்கும் கடிதம், கம்பனி செயலாளராக கடமையாற்றுவதற்கான சம்மதத்தைத் தெரிவிக்கும் ஆரம்ப செயலாளரின் கூற்று ஒன்று

42. இலத்திரனியல் வணிகத்தின் ஊடாக வெளிநாட்டு வியாபாரம் வியாபித்தல், இலத்திரனியல் கொடுப்பனவு முறைகளைப் பயன்படுத்துதல், வர்த்தக வலயங்களும் நவீன வர்த்தகக் கூட்டுக் களும் உருவாகல்.

43. நவீன முகாமைத்துவ நுட்ப முறைகளைப் பயன்படுத்துதல், பொதுவாக பாரிய அளவான சில்லறை வியாபார நிலையங்களை நடத்திச் செல்லுதல்.

அதிகளவான இருப்புக்களைப் பேணாது தேவையான அளவுகளில் உடனடியாக பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருத்தல்.

44. வங்கி ஆணை, நாணயக் கடிதம், இலத்திரனியல் கொடுப்பனவு முறை, வெளிநாட்டு அஞ்சலும் டெலெக்ஸ் ஒப்படைப்பும்

45. கடன் வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்
ஊக்குவிப்பு கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொடுத்தல்
நிறுவன உற்பத்தி பொருட்களை மலிவு விலையில் வழங்குதல்

46. தர உறுதி — பூச்சிய வழு
தர வட்டம் — தர நியமம்
மொத்த தர முகாமைத்துவம் — புள்ளிவிபர செயன்முறைக் கட்டுப்பாடு

47. அளவிடக்கூடியது — போதுமானது
அடையக்கூடியது — வேறுபடுத்தி இனங்காண முடியும்
செயற்படுத்த முடியும்

48. சாதாரண பங்குகள் — முன்னுரிமைப் பங்குகள்
பங்கு ஆணைப்பத்திரம் — கூட்டிணைக்கப்பட்ட தொகுதிக்கடன்
அரச கடன் பிணைப்பத்திரங்கள்

49. ஊழியர் விளைதிறனை அதிகரித்தல் — ஊழியர் ஊக்கப்படுத்தல் உயர்வடைதல்
பயிற்சி தேவைகளை இனங்காணல்

50. உரிமையாளரின் மூலதனம் — கடன் பெறுவனவு
காசு விற்பனை — கடன்பட்டோரின் சேகரிப்புக்கள்
பெறப்பட்ட வருமானங்கள்